**ஜூலை – 15**

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழக இடைத்தேர்தல் அறிவிப்பு மீது சென்னை உயர்நீதிமன்றம்

- 2026 ஆம் ஆண்டு ஜூலை 31 வரை ஐந்து தமிழ்நாடு சட்டமன்றத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்களை அறிவிப்பதில் இருந்து இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு (ECI) சென்னை உயர்நீதிமன்றம் தடை விதித்துள்ளது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ராஜினாமா செய்த திருச்சி கிழக்கு, பெருந்துறை, அம்பாசமுத்திரம், விராலிமலை மற்றும் கரூர் ஆகிய தொகுதிகளுக்கு இந்த உத்தரவு பொருந்தும், ஆனால் அவர்களின் வெற்றியை எதிர்த்து தொடரப்பட்ட தேர்தல் வழக்குகள் இன்னும் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.
- தேர்தல் வழக்குகளை முடித்து வைப்பதற்கு முன்பாக இடைத்தேர்தல்களை நடத்தினால், பின்னர் அந்த மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் பட்சத்தில் ஒரே தொகுதியை இருவர் பிரதிநிதித்துவப்படுத்துவதாக உரிமை கோரும் சூழ்நிலை உருவாகலாம் என்று நீதிமன்றம் கருதியது.
- இந்த மனுவில் 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 151A பிரிவைக் குறிப்பிட்டுள்ளது என்பதோடு இது சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள விதி விலக்குகளுக்கு உட்பட்டு ஆறு மாதங்களுக்குள் இடைத்தேர்தல் மூலம் காலியிடத்தை நிரப்ப வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறது.
- ஒரே தொகுதி தொடர்பான தேர்தல் வழக்குகள் நிலுவையில் இருக்கும்போது இடைத்தேர்தல் நடத்தப்படக் கூடாது என்று கூறும் உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளையும் (1967, 2011 மற்றும் 2018) இந்த மனு சுட்டிக் காட்டியுள்ளது.




# தேசியச் செய்திகள்

## மருந்து இறக்குமதி துறைமுகங்கள்

- சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகமானது மகாராஷ்டிராவின் நவி மும்பை

விமான நிலையத்தை மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான அங்கீகரிக்கப்பட்ட துறைமுகமாக அறிவித்தது.

- இந்த அறிவிப்பானது 1945 ஆம் ஆண்டு மருந்துகள் விதிகளின் 43A விதியை திருத்தி உள்ளது என்ற நிலையில் இதன் மூலம் இந்தியாவின் அறிவிக்கப்பட்ட மருந்து இறக்குமதி துறைமுகங்களின் எண்ணிக்கை 42 ஆக அதிகரித்துள்ளது.
- 1940 ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் சட்டம் இந்தியாவில் மருந்துகளின் இறக்குமதி, உற்பத்தி மற்றும் விற்பனையை ஒழுங்குபடுத்துகிறது, அதே சமயம் விதி 43A அங்கீகரிக்கப்பட்ட நுழைவுத் துறைமுகங்களை பட்டியலிடுகிறது.
- மருந்து ஒழுங்குமுறைக்கான உயர்மட்ட தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவான மருந்து தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவுடன் (DTAB) கலந்தாலோசித்த பிறகு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
- நவி மும்பை விமான நிலையம் ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட விநியோகச் சங்கிலி மூலம் மருந்துகள், செயல்மிகு மருந்து மூலப்பொருட்கள் (APIs) மற்றும் சுகாதாரப் பொருட்களின் இறக்குமதியை எளிதாக்கும்.





## மாவட்டங்களுக்கான செயல்திறன் தரக் குறியீடு (PGI-D) 2025–26

- மாவட்டங்கள் முழுவதும் பள்ளிக் கல்வியின் செயல்திறனை மதிப்பிடுவதற்காக என மாவட்டங்களுக்கான செயல்திறன் தரக் குறியீட்டை (PGI-D) 2025–26-ஐ கல்வி அமைச்சகம் வெளியிட்டது.
- மாவட்டங்களுக்கான செயல்திறன் தரக் குறியீடு (PGI-D) என்பது 6 வகைகளாகவும் 11 களங்களாகவும் பிரிக்கப்பட்ட 70 குறிகாட்டிகளைப் பயன்படுத்தி மாவட்டங்களை மதிப்பிடும் ஒரு வருடாந்திர கட்டமைப்பாகும், இதன் மொத்த மதிப்பெண் 600 புள்ளிகள் ஆகும்.
- இந்த மதிப்பீடானது ஒருங்கிணைந்த மாவட்ட கல்வித் தகவல் முறைமை பிளஸ் (UDISE+), பராக் ராஷ்டிரிய சர்வேக்ஷன் (PRS) 2024 மற்றும் பிரபந்த் (PRABANDH) தளம் ஆகியவற்றிலிருந்து தரவுகளைப் பயன்படுத்துகிறது.
- 2025-26 ஆம் ஆண்டில், 462 மாவட்டங்கள் தங்கள் முடிவு மதிப்பெண்களை மேம்படுத்தி உள்ளன, ஆனால் எந்த மாவட்டமும் மிக உயர்ந்த 'உத்கர்ஷ்' தரத்தை அடையவில்லை;


1 மாவட்டம் உத்தம்-1 தரத்தையும், 19 மாவட்டங்கள் உத்தம்-2 தரத்தையும் அடைந்து உள்ளன.

- சிறப்பாக செயல்பட்ட 19 மாவட்டங்களில் டெல்லியில் இருந்து 4, பஞ்சாபிலிருந்து 7, கேரளாவிலிருந்து 3, மகாராஷ்டிராவிலிருந்து 2 மற்றும் சண்டிகர், டையூ மற்றும் ஹமிர்பூர் (இமாச்சலப் பிரதேசம்) ஆகியவை அடங்கும்.




## பொருளாதாரச் செய்திகள்

### கொள்கைக்கான 3 கணக்கெடுப்புகள் – RBI




- பணவியல் கொள்கை முடிவுகளுக்கான தரவுகளைச் சேகரிப்பதற்காக இந்திய ரிசர்வ் வங்கி (RBI) மூன்று முக்கிய கணக்கெடுப்புகளைத் தொடங்கியுள்ளது.
- குடும்பங்களின் பணவீக்க எதிர்பார்ப்பு கணக்கெடுப்பு, ஊரக நுகர்வோர் நம்பிக்கை கணக்கெடுப்பு மற்றும் நகர்ப்புற நுகர்வோர் நம்பிக்கை கணக்கெடுப்பு ஆகியவை இந்தக் கணக்கெடுப்புகளில் அடங்கும்.
- பணவீக்க எதிர்பார்ப்பு கணக்கெடுப்பானது, 19 நகரங்களில் அடுத்த மூன்று மாதங்கள் மற்றும் ஒரு வருடத்திற்கான விலை மாற்றங்கள் மற்றும் பணவீக்கம் குறித்த குடும்பங்களின் கருத்துக்களை ஆய்வு செய்கிறது.
- ஊரக நுகர்வோர் நம்பிக்கை கணக்கெடுப்பானது, 31 மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களில் (UTs) உள்ள ஊரக மற்றும் புறநகர் குடும்பங்களிடமிருந்து பொருளாதாரம், வேலைவாய்ப்பு, வருமானம், விலைகள் மற்றும் செலவினங்கள்


குறித்த கருத்துக்களைச் சேகரிக்கிறது.

- ❖ நகர்ப்புற நுகர்வோர் நம்பிக்கை கணக்கெடுப்பானது, 19 நகரங்களில் பொருளாதார நிலைமைகள், வேலைவாய்ப்பு, விலைகள், வருமானம் மற்றும் செலவினங்கள் குறித்த குடும்பங்களின் கருத்துக்களைச் சேகரிக்கிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## மறைந்திருந்த கருந்துளைகள்

- ❖ அருகிலுள்ள விண்மீன் திரள்களில் மங்கலான, பலவீனமாகச் செயல்படும் மிகப் பெரிய கருந்துளைகளின் மறைந்திருந்த ஒரு தொகுப்பை வானியலாளர்கள் தற்போது கண்டுபிடித்துள்ளனர்.
- ❖ இந்திய ஆராய்ச்சியாளர்கள் அடங்கிய ஒரு சர்வதேசக் குழுவால் e-MERLIN (மேம்படுத்தப்பட்ட பல-கூறு தொலைநிலை இணைப்புடைய குறுக்கீட்டுமானி வலைப்பின்னல்) ரேடியோ வரிசையைப் பயன்படுத்தி இந்தக் கண்டுபிடிப்பு நிகழ்த்தப்பட்டுள்ளது.
- ❖ இக்குழு பாலோமர் (Palomar) மாதிரியிலிருந்து அருகிலுள்ள 280 விண்மீன் திரள்களை ஆய்வு செய்ததுடன், அவற்றின் மையங்களிலிருந்து வெளிப்படும் சிறிய ரேடியோ உமிழ்வுகளையும் கண்டறிந்துள்ளது.
- ❖ வழக்கமான உற்றுநோக்கல்கள் மூலம் கண்டறிவது கடினமான, பலவீனமாகப் பொருட்களை ஈர்க்கும் மிகப்பாரிய கருந்துளைகளை இந்த ஆய்வு அடையாளம் கண்டுள்ளது.
- ❖ கருந்துளை செயல்பாட்டை உறுதி செய்வதற்காக, நாசாவின் சந்திரா எக்ஸ்-ரே ஆய்வகத்தின் எக்ஸ்-ரே தரவுகள் மூலம் இந்தக் கண்டுபிடிப்புகள் உறுதிப்படுத்தப் பட்டுள்ளன.





# சுற்றுச்சூழல் செய்திகள்


## IUCN செந்நிறப் பட்டியல் 2026 புதுப்பிப்பு

- ❖ இயற்கை பாதுகாப்பிற்கான சர்வதேச ஒன்றியமானது (IUCN), உலகளாவிய உயிரினங்களின் பாதுகாப்பு நிலையை மதிப்பிட்டு, அச்சுறுத்தலுக்கு உள்ளான உயிரினங்களின் புதுப்பிக்கப்பட்ட செந்நிறப் பட்டியல் 2026-ஐ வெளியிட்டது.
- ❖ புதுப்பிக்கப்பட்ட இந்தப் பட்டியலில் 175,909 உயிரினங்கள் உள்ளன என்ற நிலையில் அவற்றில் 49,505 உயிரினங்கள் அழிவின் விளிம்பில் உள்ளன.

- ஆழ்கடல் சுரங்க நடவடிக்கைகளால் முக்கியமாக மெல்லுடலிகளில் (நத்தைகள், கிளாம்கள், சிப்பிகள், ஆக்டோபஸ் மற்றும் கணவாய் போன்றவை) 50%-க்கும் அதிகமானவை அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன.
- தொழில்துறை வளர்ச்சி, பருவநிலை மாற்றம் மற்றும் வாழ்விட இழப்பு காரணமாக பாலைவன மழைத் தவளை (பிரெவிசெப்ஸ் மேக்ரோப்ஸ்) 'அச்சுறுத்தல் நிலையை அண்மித்த இன' நிலையில் இருந்து 'எளிதில் பாதிக்கப்படக்கூடிய இனமாக' மாற்றப் பட்டுள்ளது.
- ஆக்கிரமிப்பு பூனைகள் மற்றும் நரிகளுக்கு எதிரான பாதுகாப்பு முயற்சிகள் காரணமாக ஆஸ்திரேலியாவின் நம்பாட்/பட்டை எறும்புத்தின்னி (மிர்மெகோபியஸ் ஃபாஸியாடஸ்) 'அருகி வரும் இன' நிலையில் இருந்து 'அச்சுறுத்தல் நிலையை அண்மித்த இன' நிலைக்கு முன்னேறியுள்ளது.




## உலகளாவிய உயிரித்திரள் உமிழ்வு 2026




- கோபர்நிகஸ் வளிமண்டல கண்காணிப்பு சேவையின் (CAMS) தரவுகளின்படி, 2026 ஆம் ஆண்டின் முதல் பாதியில் உலகளாவிய உயிரித்திரள் எரிப்பு உமிழ்வுகள் அதன் மிகக் குறைந்த அளவை எட்டியுள்ளது.

- 2026 ஆம் ஆண்டு ஜனவரி 1 முதல் ஜூன் 30 வரை உயிரித்திரள் எரிப்பதால் ஏற்படும் மொத்த கார்பன் உமிழ்வு 400 மெகாடன்களுக்குக் குறைவாகவே இருந்துள்ளது.
- சுமார் 154 மெகா டன் கார்பன் உமிழ்வுடன் ஆப்பிரிக்கா மிகப்பெரிய உமிழ்வுப் பகுதியாக உள்ளது, அதைத் தொடர்ந்து ஆசியா சுமார் 113 மெகா டன்களுடன் உள்ளது.
- CAMS அமைப்பானது 2003 ஆம் ஆண்டு முதல் செயற்கைக்கோள் கண்காணிப்புகள் மூலம் செயலில் உள்ள தீ விபத்துகளைக் கண்காணிக்க உலகளாவிய தீ ஒருங்கிணைப்பு அமைப்பு (GFAS) தரவுத் தொகுப்பைப் பயன்படுத்துகிறது.
- யூரேசியா மற்றும் வட அமெரிக்காவில் ஜூன் மாத இறுதியில் ஏற்பட்ட காட்டுத்தீ மற்றும் எல் நினோ நிலைகள் 2026 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் உமிழ்வை மிகவும் அதிகரிக்கக் கூடும்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## அகில இந்திய உயர்கல்வி கணக்கெடுப்பு (AISHE) அறிக்கை 2023-24: உயர்கல்வி வளர்ச்சி




- மத்திய கல்வி அமைச்சகம் வெளியிட்ட அகில இந்திய உயர்கல்வி கணக்கெடுப்பு (AISHE) அறிக்கை 2023-24-இன் படி, இந்தியாவின் உயர்கல்வி சேர்க்கை சாதனை அளவாக 4.5 கோடி மாணவர்களை எட்டியுள்ளது.
- உயர்கல்வியில் மொத்த சேர்க்கை விகிதம் (GER) 2014-15 ஆம் ஆண்டில் 23.7 ஆக இருந்த நிலையில் இருந்து, 2023-24 ஆம் ஆண்டில் 30 ஆக உயர்ந்துள்ளது.
- பெண் மாணவர்களின் சேர்க்கை 2.24 கோடியை எட்டியுள்ளது என்ற நிலையில் மொத்த மாணவர்களில் பெண்கள் 49.7% ஆக உள்ளனர்; இதில் பாலினச் சமத்துவக் குறியீடு (GPI) 1.08 ஆக உள்ளது.

- 2014-15 ஆம் ஆண்டு முதல் பட்டியலிடப்பட்ட சாதியினரின் (SCs) சேர்க்கை 51.4%-மும், பட்டியலிடப்பட்ட பழங்குடியினரின் (STs) சேர்க்கை 75.7%-மும், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் (OBCs) சேர்க்கை 60.2%-மும் அதிகரித்துள்ளது.
- அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) படிப்புகளில் சேர்க்கை 1 கோடியைத் தாண்டியுள்ளது, இதில் மாணவிகள் 44% பங்களிப்பை வழங்கி உள்ளனர்.
- AISHE என்பது உயர்கல்வி நிறுவனங்களின் மாணவர்கள், ஆசிரியர்கள், உள் கட்டமைப்பு மற்றும் கல்வித் திட்டங்கள் பற்றிய தரவுகளைச் சேகரிப்பதற்காக மத்திய கல்வி அமைச்சகத்தால் நடத்தப்படும் ஒரு வருடாந்திர கணக்கெடுப்பாகும்.


## உலக சுகாதார அமைப்பின் (WHO) உலகளாவிய புற்றுநோய் நிலை அறிக்கை 2026




- உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது உலகளாவிய புற்றுநோய் நிலை அறிக்கை 2026-என்ற அறிக்கையை வெளியிட்டது.
- இந்த அறிக்கையானது உலகளாவிய புற்றுநோய் பாதிப்பு, புற்றுநோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் சுகாதார அமைப்பின் திறன் பற்றிய விரிவான மதிப்பீட்டை வழங்குகிறது.
- புற்றுநோய் பராமரிப்பை மேம்படுத்துவதற்காக சிறந்த திறன்கள், சிறந்த பாதுகாப்புகள் மற்றும் சிறந்த மதிப்பு ஆகிய மூன்று உத்திசார் மாற்றங்களின் கீழ் ஏழு நடவடிக்கைகளை இது பரிந்துரைக்கிறது.
- உலகளாவிய சுகாதாரக் காப்பீட்டில் (UHC) புற்றுநோய் கட்டுப்பாட்டை ஒருங்கிணைக்கவும், சுகாதாரப் பணியாளர்களை வலுப்படுத்தவும் மற்றும் தரமான புற்றுநோய் பராமரிப்புக்கான சமமான அணுகலை உறுதி செய்யவும் இந்த அறிக்கை அழைப்பு விடுக்கிறது.
- புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களை கொள்கைகளின் மையத்தில் வைப்பதன் மூலமும், புற்றுநோய் தடுப்பு, சிகிச்சை மற்றும் உயிர் பிழைப்பதில் உள்ள பல்வேறு

ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதன் மூலமும் ஒரு மக்கள் மைய அணுகுமுறையை இது வலியுறுத்துகிறது.

## மாநிலங்களுக்கான செயல்திறன் தரக் குறியீடு (PGI) 2.0 அறிக்கை




- பள்ளி கல்வியில் மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் (UTs) செயல்திறனை மதிப்பிடுவதற்காக மத்திய கல்வி அமைச்சகம் மாநிலங்களுக்கான செயல்திறன் தரக் குறியீடு (PGI) 2.0 அறிக்கையை 2022-23 மற்றும் 2023-24 ஆம் ஆண்டுகளுக்காக வெளியிட்டுள்ளது.
- மாநிலங்களுக்கான செயல்திறன் தரக் குறியீடு (PGI) 2017 ஆம் ஆண்டு தொடங்கப் பட்டது என்பதுடன் மேலும் இது தேசிய கல்விக் கொள்கை (NEP) 2020 மற்றும் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளுடன் (SDGs) சீரமைப்பதற்காக 2021 ஆம் ஆண்டு PGI 2.0 என மாற்றியமைக்கப்பட்டது.
- PGI 2.0 ஆனது 2 பிரிவுகள் மற்றும் 6 களங்களின் கீழ் உள்ள 73 குறிகாட்டிகளைப் பயன்படுத்தி பள்ளி கல்வியை மதிப்பிடுவதுடன் இதன் மதிப்பெண்கள் 1,000 புள்ளிகளுக்கு கணக்கிடப்பட்டு, 'தக்ஸ்' (மிக உயர்ந்தது) முதல் 'அகான்ஷி-3' (மிகக் குறைந்தது) வரை 10 செயல்திறன் நிலைகளாக பிரிக்கப்பட்டுள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டிற்கு, சண்டிகர் 703 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்துள்ளது, அதைத் தொடர்ந்து பஞ்சாப் (631.1) மற்றும் டெல்லி (623.7) ஆகியவையும், மேகாலயா 417.9 புள்ளிகளுடன் கடைசி இடத்தையும் பிடித்துள்ளன.

- இந்த மதிப்பீடானது தேசிய சாதனைக் கணக்கெடுப்பு (NAS) 2021, ஒருங்கிணைந்த மாவட்டக் கல்வித் தகவல் முறைமை பிளஸ் (UDISE+) மற்றும் பிரதான் மந்திரி போஷன் சக்தி நிர்மான் (PM-POSHAN) திட்டம் ஆகியவற்றின் தரவுகளைப் பயன்படுத்துகிறது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## WSIS விருது 2026 - சம்ரித் கிராம்

- தொலைத்தொடர்புத் துறை (DoT) தனது 'சம்ரித் கிராம்' முன்னெடுப்பிற்காக, செயல் வரிசை C6 - சாதகமான சூழல் என்பதன் கீழ் தகவல் சமூகத்திற்கான உலகளாவிய உச்சி மாநாட்டின் (WSIS) விருது 2026-ஐ வென்றுள்ளது.
- சம்ரித் கிராம்: ஒருங்கிணைந்த பிஜிட்டல்/நேரடி மற்றும் டிஜிட்டல் (Phygital) சேவை வழங்கல் மாதிரி என்பது பாரத்நெட் அகலப்பட்டை வலையமைப்பை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு கிராமப்புற டிஜிட்டல் மாற்ற முன்னெடுப்பாகும்.
- இந்த முன்னெடுப்பானது கிராமங்களில் 'சம்ரித்தி கேந்திராக்களை' நிறுவி, அதன் மூலம் சுகாதாரம், கல்வி, விவசாயம், நிதிச் சேர்க்கை, ஆளுமை மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றில் டிஜிட்டல் மற்றும் உதவி அடிப்படையிலான நேரடிச் சேவைகளை வழங்குகிறது.
- இந்த விருது ஜெனிவாவில் நடைபெற்ற WSIS போரம் 2026-இல் சர்வதேச தொலைத் தொடர்பு ஒன்றியத்தால் (ITU) வழங்கப்பட்டது.
- இந்த முன்னெடுப்பிற்கு ஆற்றல் அளிக்கும் பாரத்நெட் திட்டம், 2.17 லட்சத்திற்கும் அதிகமான கிராம ஊராட்சிகளைச் சேவைக்குத் தயாரான நிலைக்குக் கொண்டு வந்துள்ளதுடன், இந்தியா முழுவதும் கிராமப்புற டிஜிட்டல் இணைப்பை மேம்படுத்தி உள்ளது.




# முக்கிய தினங்கள்

## தேசிய மீன் வளர்ப்போர் விழிப்புணர்வு தினம் 2026 – ஜூலை 10

- இந்த நாள் மீன் வளர்ப்போரை கௌரவிப்பதையும், நீடித்த நிலையான நீர்வாழ் உயிரின வளர்ப்பை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஒடிசாவின் அங்குல் பகுதியில் 1957 ஆம் ஆண்டு ஜூலை 10 அன்று பேராசிரியர் டாக்டர்

ஹிராலால் சௌத்ரி மற்றும் டாக்டர் அலிகுன்ஹி ஆகியோரால் இந்திய பெருங்கெண்டை மீன்களின் முதல் வெற்றிகரமான தூண்டப்பட்ட இனப்பெருக்கம் செய்யப்பட்டதை இந்த நாள் நினைவுகூர்கிறது.

- இது தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் (NFDB) நிறுவன தினத்தையும் குறிக்கிறது.
- இந்தியாவின் மீன்வளத் துறை மற்றும் நீலப் பொருளாதாரத்திற்கு மீன் வளர்ப்போர், மீனவர்கள் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு தொழில்முனைவோர் ஆற்றியப் பெரும் பங்களிப்பை இந்த நாள் அங்கீகரிக்கிறது.
- 2024–25 ஆம் ஆண்டில், இந்தியாவின் மீன் உற்பத்தி 197.75 லட்சம் டன்னாக இருந்தது, கடல் உணவு ஏற்றுமதி ₹60,500 கோடியைத் தாண்டியது என்பதோடு மேலும் கடந்த தசாப்தத்தில் இறால் உற்பத்தி 270% என்பதாக அதிகரித்துள்ளது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★